# பதவி – வெற்றிடம்

## வடமேல் மாகாண மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் மாகாண பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல்.

வடமேல் மாகாண மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் வெற்றிடமாக காணப்படுகின்ற மாகாண பணிப்பாளர் பதவிக்காக நியமிப்பதற்கு வடமேல் பிரதம செயலாளரின் சிபரிசு மற்றும் கௌரவ ஆளுநர் அவர்களது அங்கீகாரத்திற்கமைய தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் பணிபுரிகின்ற இலங்கை மிருக உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் 1 ஆம் தரத்திலான உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றது.

தகைமைகள்*:*

I. மிருக வைத்திய பட்டத்துடன் இலங்கை மிருக உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் 1 ஆம் தரத்தில் 03 ஆண்டுகளுக்கு குறையாத தொடர்ச்சியானதும் மகிச்சிகரமாக சேவை காலம் இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.
III. 2025.06.20 ஆந் திகதிக்கு சேர்த்துக்கொள்வதற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**குறிப்பு:** விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியாகும் போது இத் தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன், மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகள் உறுதிப்படுத்துகின்ற அனைத்து சான்றிதழ்களினதும் மற்றும் தேசிய அடையாளட்டையில் தன்னால் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

*01. தேர்ந்தெடுக்கப்படும் முறை:*

வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களது அங்கீகாரத்துடன் வடமேல் மாகாண ஆளுநரது செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நடாத்தப்படுகின்ற நேரடி நேர்முகப்பரீட்சையில், பெற்றுக்கொள்ளப்படும் மதிப்பெண்களின் தகுதி வரிசையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.

*02. விண்ணப்பப்படிவம் சமர்பித்தல்:*

அனைத்து விண்ணப்பப் படிவங்களையும் (மாதிரி படிவம் www.psc.nw.gov.lk என்ற இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்) நேர்த்தியாகவும் சரியாகவும் பூர்த்தி செய்து 2025.06.20 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு திணைக்களத் தலைவர் மற்றும் உரித்துடைய அமைச்சின் செயலாளர் ஊடாக (மாகாண சபைக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவராயின் உங்களது விண்ணப்பப் படிவத்தை மாகாண அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதம செயலாளரின் சிபாரிசுடன் அனுப்ப வேண்டும்) **"ஆளுநரது செயலாளர், ஆளுநரது அலுவலகம், மாளிகை, குருணாகல்"** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இடுகின்ற கடித உறையின் இடது மேல் மூலையில் **"வடமேல் மாகாண மிருக வைத்திய உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பப்படிவம் கோரல்"** என்று குறிப்பிடப்பட வேண்டும். குறித்த திகதிக்கு பின் கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்கள், பூர்த்தியற்ற விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித்திகதிக்கு குறித்த தகைமை வழங்கப்படாத விண்ணப்பதாரிகளது விண்ணப்பங்களை எதுவித அறிவித்தலும்

இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காலதாமதம் அல்லது காணாமல் போதல் தொடர்பான எந்தவொரு முறைபாடுகளையும் வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் ஏற்றுக்கொள்ளாப்படமாட்டது.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக இங்கு குறிப்பிடப்படாத விடயங்கள் குறித்து முடிவுகளை எடுக்கும் அதிகாரம் வடமேல் மாகாண கௌரவ ஆளுநருக்கு உண்டு.

இந்த அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பதிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால் சிங்கள பதிப்பே மேலோங்கும்.

இப்பதவிக்காக சேர்த்துக் கொள்வது தொடர்பான இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண கௌரவ ஆளுநரிடமே உள்ளது.

இப்படிக்கு,

வடமேல் மாகாண கௌரவ ஆளுநரது கட்டளைப்படி,

ஆளுநரது செயலாளர்,
ஆளுநரது அலுவலகம்,
வடமேல் மாகாணம்.

2025.06.09